1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, என்.ஸி.ஸி-யில் சேர்ந்து பயிற்சி பெற்றவர்களுக்கு ஓரளவுக்குச் சலுகை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். காவல் துறையில் எடுக்கும்பொழுது எந்த அளவிலே சலுகை இருக்கிறது என்று கூறுவதற்கு இயலாது. ஆனால், தொழிற்கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படும்பொழுது, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றையக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும்பொழுது என்.ஸி.ஸி-யில் எடுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுத்தான் சலுகை அளிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த தேசிய மாணவர் படையை பல சமுதாயப் பணிகளில் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சமுதாயப் பணிக்கு என்று ஒவ்வொரு கல்லூரியிலும் என்.எஸ்.எஸ்.சி. நாஷனல் சோஷியல் சர்வீஸ் கோர் என்ற அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல்வேறு வகைகளில் சிற்றூர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று சமுதாயப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். தேசிய மாணவர் படை மற்றையச் சமுதாயப் பணிகளிலே ஈடுபடுகின்ற தன்மைகள் இல்லை. ஆனால் ஆங்காங்கு சில சமயங்களில் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குபடுத்துகிற முறை ஏற்படுகிறபொழுது இந்தப் படையினர் உதவி செய்கின்றார்கள்.

முதுநிலை ஆசிரியர் பதவிகள்

*5 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967 மார்ச்சு முதல் 1972 ஜூலை 31-ம் தேதி வரை எவ்வளவு Higher Grade ஆசிரியர் பதவிகள் Secondary Grade-க்கு உயர்த்தப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 24,500 பதவிகள் உயர்த்தப்பட்டுள்ளன.